


# தமிழ்நாடு இந்தி எதிர்ப்புப் போராட்டங்களும், தீக்குளிப்புகளும்

தஞ்சை நலங்கிள்ளி

# Tamil Nadu Anti-Hindi Agitations and Self-Immolations (in Tamil)

by Thanjai Nalankilli

# தமிழ்நாடு இந்தி எதிர்ப்புப் போராட்டங்களும், தீக்குளிப்புகளும்

## தஞ்சை நலங்கிள்ளி

**Tamil Nadu Anti-Hindi Agitations and Self-Immolations**
(in Tamil)

by
Thanjai Nalankilli

பதிப்புரிமை: தஞ்சை நலங்கிள்ளி 2019

இப்புத்தகத்தையோ, இதன் பகுதிகளையோ யார் வேண்டுமானாலும் அச்சுப் புத்தகங்களாகவோ, கணினி வழியாகவோ, வலைத்தளங்களிலோ, ஊடகங்களிலோ, வேறு வடிவிலோ  வெளியிடலாம். எங்களிடம் அனுமதி கேட்க வேண்டியதில்லை.

Copyright Thanjai Nalankilli 2019

This book or any chapter in the book may be copied, distributed, reposted, reprinted, translated or shared in print, electronic, digital, Internet or other media. No permission needed from copyright holder.

தமிழ்நாடு இந்தி எதிர்ப்புப் போராட்டங்கள் (1938-1968): ஒரு சுருக்க வரலாறு
+
தீக்குளித்துயிர் நீத்த தமிழ் மறவர் எழுவர் (1965)

## உள்ளடக்கம்


**1. தமிழ்நாடு இந்தி எதிர்ப்புப் போராட்டங்கள் (1938-1968): ஒரு சுருக்க வரலாறு**

1. முன்னுரை

2. இந்தி எதிர்ப்புப் போராட்டங்கள்: 1938-1964

3. 1965: எரிமலை குமுறிற்று

3.1 தமிழ்நாடெங்கும் கறுப்புக் கொடிகள்

3.2 தீக்குளிப்புகள்

3.3 மாணவர் போராட்டம்: சனவரி 25

3.4 மாணவர் போராட்டம்: சனவரி 26

3.5 தமிழ்நாட்டுத் தெருக்களில் குருதியோட்டம்: சனவரி 27 - பெப்ருவரி 14

4. 1967: பொதுத் தேர்தல்

5. 1968: தமிழ்நாடு விடுதலைக் குரல்

6. தேங்கிக் கிடக்கும் கசப்புணர்வு

**2. தீக்குளித்துயிர் நீத்த தமிழ் மறவர் எழுவர் (1965)**

1. முன்னுரை

2. பொன்னெழுத்துப் பெயர்ப் பட்டியல்

3. வாழ்க்கைக் குறிப்புகள்

4. தீக்குளிப்பு வரலாறு

5. இனி தீக்குளிப்புகள் தேவையில்லை

**நமது பிற இலவச தமிழ் நூல்கள்**

Key words in English: Hindi imposition, Tamil Nadu, history of anti-Hindi agitations, students anti-Hindi agitation of 1965, self-immolation, Indian constitution, official languages, national language, Indian government, Periyar EVR

முதல் பக்கத்துக்குப் போக இங்கே கிளிக்கடிக்க அல்லது அடுத்த பக்கத்தில் முதலாம் கட்டுரையைப் படிக்க

.

# தமிழ்நாடு இந்தி எதிர்ப்புப் போராட்டங்கள்: ஒரு சுருக்க வரலாறு

தஞ்சை நலங்கிள்ளி

**உள்ளடக்கம்**


1. முன்னுரை

2. இந்தி எதிர்ப்புப் போராட்டங்கள்: 1938-1964

3. 1965: எரிமலை குமுறிற்று

3.1 தமிழ்நாடெங்கும் கறுப்புக் கொடிகள்

3.2 தீக்குளிப்புகள்

3.3 மாணவர் போராட்டம்: சனவரி 25

3.4 மாணவர் போராட்டம்: சனவரி 26

3.5 தமிழ்நாட்டுத் தெருக்களில் குருதியோட்டம்: சனவரி 27 - பெப்ருவரி 14

4. 1967: பொதுத் தேர்தல்

5. 1968: தமிழ்நாடு விடுதலைக் குரல்

6. தேங்கிக் கிடக்கும் கசப்புணர்வுகள்


## இக்கட்டுரையில் பயன் படுத்தப் பட்டுள்ள தூய தமிழ்ச் சொற்கள்

அகில இந்திய வானொலி - All India Radio

அரசியற் சட்டம் - constitution

ஆட்சி மொழி - official language

இந்தியக் குடியரசுத் தலைவர் -President of India

பேராயக் கட்சி - Congress Party

தலைமை அமைச்சர் - Prime Minister

தளை செய் - arrest

நடுவண்ணரசு அலுவலகங்கள் - central government offices

குறிப்பேடு - reference

## 1. முன்னுரை

"இந்தி எதிர்ப்புப் போராட்டம்" என்பது "இந்தி திணிப்பு எதிர்ப்புப் போராட்டம்" என்பதன் சுருக்கமேயாம். தமிழ்நாட்டு மக்களுக்கு இந்தி மொழி மீதோ இந்தி மக்கள் மீதோ எந்தவொரு காழ்ப்புணர்வும் கிடையாது. அம்மொழி இந்தி பேசப்படும் பகுதிகளிலும், அதை ஆட்சி மொழியாக ஏற்றுக் கொள்வோரிடமும் வளர்ந்து செழிக்கட்டும். ஆனால் அதை இந்தியாவின் ஆட்சி மொழியாக்கியதையும், தொடர்ந்து இந்தி மொழியைத் தமிழர் மீது திணிப்பதையும் தமிழ்நாடு எதிர்க்கிறது. எல்லா இந்தியமொழிகளும் இந்தியாவின் ஆட்சி மொழியாகும் நிலை ஏற்படும் வரையிலும், ஆங்கிலம் மட்டுமே இந்தியாவின் ஆட்சி மொழியாக இருக்க வேண்டும் என்பதே எம் கொள்கை. இதற்காகத் தான் ஆயிரக்கணக்கானோர் சிறைப்பட்டனர். நூற்றுக்கணக்கில் காவலரால் (police) தடியடி பட்டுக் காயப்பட்டனர். நூற்றுக்கணக்கில் காவலராலும் (police), பட்டாளத்துக்காரராலும் (soldiers) சுடப் பட்டுக் காயப்பட்டனர்; 63 பேர் உயிரிழந்தனர். ஏழுபேர் தீக்குளித்து உயிர் நீத்தனர்.

தமிழ்நாட்டின் மீது இந்தி திணிக்கப்பட்ட முதல் நாளிலிருந்தே தம்ழ்நாட்டில் இந்தி திணிப்பு எதிர்ப்பும் தொடங்கியது. இந்தி திணிப்பும், இந்தி எதிர்ப்பும் இன்றும் தொடர்கிறது. இக்கட்டுரை இந்தி எதிர்ப்பு வரலாற்றைச் சுருக்கமாகத் தருகிறது. அன்று முதல் இன்று வரை நடைபெற்ற எல்லா போராட்டங்களையும் இங்கு நாம் குறிப்பிடவில்லை. குறிப்பான சில போராட்டங்களளையே தருகிறோம்.

## 2. இந்தி எதிர்ப்புப் போராட்டங்கள்: 1938-1964

ஆங்கிலேயன் இந்தியாவை விட்டு வெளியேறுவதற்கு சில ஆண்டுகளுக்கு முன்னமேயே, மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட மாநில அரசுகளை (மாகாண அரசுகளை) அமைக்க சம்மதித்தான்.

அக்கால் அரசியல் முன்னணியில் இருந்த பேராயக் கட்சி (Congress Party) 1937-ல் சென்னை மாகாணத்தின் (Madras Presidency) ஆட்சியைக் கைப்பற்றியது. அக்கால் பேராயக் கட்சியைச் சார்ந்திருந்த சி. இராசகோபாலச்சாரி (இராசாசி) மாநிலத் தலைமையமைச்சரானார். (இந்நாளைய தமிழ்நாட்டின் பெரும் பகுதியும், ஆந்திர மாநிலத்தின் பல பகுதிகளும் அக்கால் சென்னை மாநிலம் என்றழைக்கப்பட்டது.) வடஇந்தியரின் தலைமைக்குக் கட்டுப்பட்டிருந்த பேராயக் கட்சி (Congress Party) முதன்முதலாகத் தமிழ்நாட்டின் மீது இந்தியைத் திணிக்க முன்வந்தது. உடனடியாக இந்தி எதிர்ப்புப் போராட்டம் தமிழ்நாட்டில் தொடங்கியது.

1938: சனவரி 3

பேராயக் கட்சி அரசு இந்தியை பள்ளிகளில் கட்டாய பாடமாக்க முன்வரும் என்பதறிந்த தமிழ்த் தலைவர்களும், தொண்டர்களும் மாநிலத் தலைமையமைச்சர் இராசாசியின் வீட்டின் முன் மறியல் செய்தார்கள். 73 பெண்கள் உட்பட, 1271 பேர் தளைப் படுத்தப் பட்டார்கள் (கைது செய்யப் பட்டார்கள்). இதுவே தமிழ்மக்களின் முதல் இந்தியெதிர்ப்புப் போராட்டம்.

1938: பெப்ருவரி 27

இந்தியெதிர்ப்பு மாநாடு காஞ்சிபுரத்தில் நடைபெற்றது. சோமசுந்தர பாரதியார், பாவேந்தர் பாரதிதாசன், கா. ந. அண்ணாதுரை (அறிஞர் அண்ணா) உட்பட பல தமிழறிஞர்களும், தலைவர்களும் இம்மாநாட்டில் பேசினார்கள்.

1938: ஏப்ரில் 21

சென்னை மாநிலப் பள்ளிகளில் இந்தி கட்டாய பாடமாக்கப் பட்டது.

1938: மே 28

இந்தி எதிர்ப்பு வாரியம் (Anti-Hindi Command) அமைக்கப் பட்டது. அதன் தலைவராக சோமசுந்தர பாரதியாரும், செயலாளராக கி. ஆ. பெ. விசுவநாதமும் தேர்ந்தெடுக்கப் பட்டார்கள்.

1938: சூன் 3

சைவப் பேரறிஞர் மறைமலையடிகள் தலைமையில் சென்னையிலுள்ள கோடம்பாக்கத்தில் இந்தி எதிர்ப்பு மாநாடொன்று நடை பெற்றது.

1938: ஆகச்டு 1

தமிழ் மக்களின் இந்தியெதிர்ப்பைக் காட்டுமாற்றான், இந்தி எதிர்ப்புக் கால்நடைப் பயணம் ஆகச்டுத் திங்கள் முதல் நாளில் திருச்சியில் தொடங்கி செப்டம்பர் பதினொன்றாம் நாளில் சென்னையில் முடிவுற்றது.

1938: செப்டம்பர் 10

சென்னையிலுள்ள **திருவல்லிக்கேணி கடற்கரையில்** நடந்த இந்தி எதிர்ப்புப் பொதுக்கூட்டத்தில் பெரியார் ஈ. வே. ரா. (ஈ. வே. இராமசாமி) தமிழ்நாடு விடுதலை பெற்ற தனி நாடாக வேண்டும் என்று சொன்னார். அவர் "தமிழ் நாடு தமிழருக்கே" என்று சொன்னபோது கூட்டத்தினர் கைதட்டி ஆர்ப்பரித்தனர்.

1939

திருவாட்டி தருமாம்பாள் தலைமையில் மகளிர் இந்தியெதிர்ப்பு மாநாடு நடை பெற்றது. தமிழ்ப் பெண்டிர் பல இந்தி எதிர்ப்பு மாநாடுகளிலும், போராட்டங்களிலும் பங்கு கொண்டாலும், பெண்களுக்கென பெண்களே நடத்திய முதல் இந்தியெதிர்ப்பு மாநாடு இதுவேயாம். (தமிழ்நாட்டில் முதன்முதலாக 1938 சனவரித் திங்கள் 3-ம் நாள் நடந்த இந்தியெதிர்ப்புப் போராட்டத்தில் 73 பெண்கள் தளை (கைது) செய்யப்பட்டதை முன்னமேயே கூறினோம்.)

இந்தியெதிர்ப்புப் போராட்டத்தில் பங்கெடுத்ததற்காகச் சிறையிலடைக்கப் பட்ட இரு தமிழ் மறவர்கள் (தாளமுத்து, நடராசன்) **சிறையில் மரணம் அடைந்தார்கள்**. இருவரும் சிறையில் நோய் வாய்ப்பட்டதால் மருத்துவ மனைக்கு அனுப்பப் பட்டனர்; மருத்துவ மனையில் மரணமடைந்தனர். நடராசன் திசம்பர் 1938-ல் சிறையிலடைக்கப் பட்டார்; சனவரி 1939-ல் மரணமடைந்தார். தாளமுத்து பெப்ருவரி 1938-ல் சிறையிலடைக்கப் பட்டார்; மார்ச் 1939-ல் மரணமடைந்தார்.

1940: பெப்ருவரி 21

தமிழ் மக்களின் பெருவாரியான எதிர்ப்பினிமித்தம் சென்னை மாநில அரசு பள்ளிகளில் இந்தியைக் கட்டாய பாடமாக்கியதைக் கைவிட்டது. இந்தியெதிர்ப்புப் போராட்டங்கள் நிறுத்தப்பட்டன.

1942

இந்தி எதிர்ப்புப் போராட்டங்கள் முடிந்து இரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டமையால் மீண்டும் இந்தி திணிப்புக்கு வெள்ளோட்டம் விடத் துணிந்தது சென்னை மாநில அரசு. மீண்டும் இந்தியைப் பள்ளிகளில் கட்டாய பாடமாக்கியது. உடனடியாக இந்தி எதிர்ப்புப் போராட்டங்கள் தொடங்கின. இரண்டாம் முறையாக, சென்னை மாநில அரசு பள்ளிகளில் இந்தியைக் கட்டாய பாடமாக்கியதைக் கைவிட்டது.

1946

பிரகாசம் என்பார் தலைமையில் மீண்டும் பேராயக்கட்சி (Congress Party) சென்னை மாநில அரசை அமைத்தது. இவ்வரசு மீண்டும் இந்தியைக் கட்டாய பாடமாக்கியது. பெரியார் ஈ. வே. ரா. (ஈ. வே. இராமசாமி), கா. ந. அண்ணாதுரையை (C. N. Annadurai) இந்தி எதிர்ப்புப் போராட்டங்களை நடத்தும் பணியில் அமைத்தார். போராட்டங்கள் செவ்வணே நடந்தன. மூன்றாம் முறையாக, சென்னை மாநில அரசு பள்ளிகளில் இந்தியைக் கட்டாய பாடமாக்கியதைக் கைவிட்டது.

1947: ஆகச்டு 15

ஆகச்டுத் திங்கள் 15-ம் நாளில் ஆங்கிலேயன் ஆட்சி இந்தியாவில் முடிவுற்றது. பேராயக்கட்சி (Congress Party) மாநில அரசையும், நடுவண் அரசையும் (central government) கைப்பற்றியது. நடுவண் அரசு இந்தி பேசாத மாநிலங்களில் இந்தியைத் திணிப்பதில் மும்முரம் காட்டத் தொடங்கியது.

1948

சென்னை மாநிலப் பள்ளிகளில் மீண்டும் இந்தி கட்டாய பாடமாக்கப்பட்டது. சூலை 17-ம் நாளில் பெரியார் ஈ. வே. ரா. (ஈ. வே. இராமசாமி) சென்னையில் இந்தி எதிர்ப்பு மாநாடு நடத்தினார். திரு வி. க. (வி. கல்யாணசுந்தரம்) மாநாட்டைத் தொடங்கி வைத்தார். தவத்திரு மறைமலை அடிகளார் மாநாட்டுக்குத் தலைமை தாங்கினார். கா. ந. அண்ணாதுரை, ம. பொ. சிவஞானம் மற்றும் பல தமிழ்த் தலைவர்களும், அறிஞர்களும் உரை நிகழ்த்தினார்கள்.

ஆகச்டு முதலாம் நாளில் பேராசிரியர் இலக்குவனார் மற்றுமொரு இந்தியெதிர்ப்பு மாநாடு நடத்தினார்.

1948-1949

திராவிடர் கழகம் (தி. க; DK) பல இந்தி எதிர்ப்புப் போராட்டங்களை பள்ளிகளின் முன் நடத்தியது. பலவாயிரம் பேர் தளை படுத்தப் பட்டு (கைது செய்யப்பட்டு) சிறையில் அடைக்கப் பட்டார்கள்.

1950: சனவரி 26

இந்தியாவின் புதிய அரசியற் சட்டம் (Indian constitution) சனவரி 26-ம் நாளில் நடைமுறைக்கு வந்தது. தமிழ்த் தலைவர்களின் எதிர்ப்பை உதறித் தள்ளிவிட்டு இந்தி இந்தியாவின் ஆட்சி மொழியாக்கப் (official language) பட்டது. இந்தியோடு கூட ஆங்கிலமும் 15 ஆண்டு காலத்துக்கு (அதாவது 1965 சனவரி 26 வரையிலும்) ஆட்சி மொழியாகப் பயன் படுத்தப் படும். 1965 சனவரி 26-லிருந்து இந்தி மட்டுமே இந்திய அரசின் ஆட்சி மொழியாகப் பயன்படுத்தப்படும்.

1950: சூலை 18

தமிழ் மக்களின் கடுத்த எதிர்ப்பைத் தாங்க முடியாமல், நான்காம் முறையாக, சென்னை மாநில அரசு பள்ளிகளில் இந்தியைக் கட்டாய பாடமாக்கியதைக் கைவிட்டது. இதன் பிறகு தமிழ்நாட்டிலுள்ள அரசுப் பள்ளிகளில் இந்தி கட்டாய பாடமாக்கப் படவில்லை. 1967-த் தேர்தலில் தமிழ்நாட்டுப் பள்ளிகளில் இந்தியை மாறிமாறித் திணித்த பேராயக் கட்சி (Congress Party) படு தோல்வியடைந்தது. இந்தி திணிப்பை அக்கால் எதிர்த்து நின்ற திராவிட முன்னேற்றக் கழகம் (தி. மு. க) வெற்றி பெற்று மாநில அரசை அமைத்தது. 1968-ல் முதலமைச்சர் அறிஞர் கா. ந. அண்ணாதுரை தமிழ்நாட்டு மாநில அரசுக்குக் கட்டுப்பட்ட பள்ளிகளில் இந்தி கற்பிக்கப் படுவதை நிறுத்தினார். இவர் கட்டளையை அதன் பின் வந்த முதலமைச்சர்கள் அனைவரும் (**மு. கருணாநிதி, ம. கோ. இராமசந்திரன், செயலலிதா செயராம்)** நிறைவேற்றி வருவது மகிழ்சிக்குரியது. அண்மையில் இந்நாள் முதலமைச்சர் செயலலிதா செயராம், "தமிழ்நாட்டு மக்களின் விருப்பத்துக்கு எதிராக இந்தி இந்தியாவின் ஆட்சி மொழியாக இருக்கும் வரையிலும் பள்ளிகளில் இந்தி கற்பிக்கப் படமாட்டாது" என்று கூறியது நம் நெஞ்சைக் குளிர வைக்கிறது. இந்திய நடுவண் அரசு பல வகைகளிலும் இந்தியைத் தொடர்ந்து திணித்து வரும்

நிலையில் மீண்டும் பள்ளிகளில் இந்தியை நுழைய விடுவோமானால் அது அறிஞர் கா. ந. அண்ணாதுரையின் நினைவில் காறி உமிழ்வது போல்வதாகும். தமிழ்நாட்டுப் பள்ளிகளில் இந்தி படிப்பித்தால் தமிழ் மாணவர்களின் வேலை வாய்ப்பு பெருகும் என்ற தவறான செய்தியைச் சிலர் பரப்பி வருகிறார்கள். இக்கூற்று தவறு என்பதை குறிப்பேடு 1 (Reference 1) விளக்குகிறது.

<u>1952</u>

இந்திய நடுவண் அரசு (Indian Central Government) சென்னை மாநிலத்திலுள்ள எல்லா நடுவண்ணரசு அலுவலகங்களிலும் இந்திப் பெயர்ப்பலகைகள் போடப்பட வேண்டும் என்று ஆணை பிறப்பித்தது. திராவிடர் கழகமும் (தி. க.), திராவிட முன்னேற்றக் கழகமும் (தி. மு. க.) இதையெதிர்த்துக் கிளர்ச்சி நடத்தின. தி. க. தலைவர் பெரியார் ஈ. வே. ரா. திருச்சியில் இந்திப் பெயர்ப் பலகைகள் மீது கரி (tar) பூசி அழித்தார். தி. மு. க. பொது செயலாளர் அறிஞர் அண்ணா (கா. ந. அண்ணாதுரை) கோவையில் (கோயம்புத்தூரில்) அவ்வாறு செய்தார். இத்தகைய நிகழ்சிகள் சென்னை மாநிலமெங்கும் நடை பெற்றன. சிலவாயிரம் பேர் தளை (கைது) செய்யப்பட்டனர்.

<u>1959</u>

1965 சனவரி 26-ம் நாளிலிருந்து இந்தி இந்திய நடுவண்ணரசின் ஒரே ஆட்சிமொழியாவதற்கான முயற்சிகள் அனைத்தும் முழுமூச்சாக நடைபெற வேண்டுமென இந்தியக் குடியரசுத் தலைவர் (President of India) ஆணை பிறப்பித்தார். அதாவது 1965 சனவரி 26-ம் நாளிலிருந்து இந்திய நடுவண்ணரசு இந்தியை மட்டுமே பயன்படுத்தும்.

இந்திய அரசு நடத்தும் அகில இந்திய வானொலி (All India Radio) சென்னை மாநிலத்திலுள்ள (தமிழ்நாட்டிலுள்ள) வானொலி நிலையங்களில் "ஆகாசவாணி" என்ற இந்திப்பெயரைப் பயன்படுத்தத் தொடங்கியது. தமிழ் மக்கள் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். தமிழ்க் கலைஞர்கள் வானொலி நிகழ்சிகளில் பங்கெடுக்க மறுத்தனர். இதனால் இந்திய அரசு (தமிழ்நாட்டிலுள்ள) வானொலி நிலையங்களில் "ஆகாசவாணி" என்ற இந்திப்பெயரைப் பயன்படுத்துவதைக் கைவிட்டது. 23 ஆண்டுகளுக்குப் பின், 1982-ல் மீண்டும் தமிழ்நாட்டிலுள்ள வானொலி நிலையங்கள் "ஆகாசவாணி" என்ற இந்திப்பெயரைப் பயன்படுத்தத்

தொடங்கின. தமிழ்நாட்டில் அதை எதிர்து இந்தி எதிர்ப்புப் போராட்ட்ங்கள் நடந்தன. மீண்டும் இந்திய அரசு பின்வாங்கியது.

1960

திராவிட முன்னேற்றக் கழகம் (தி. மு. க.) ஈ. வெ. கி. சம்பத்தின் தலைமையில் இந்தி எதிர்ப்புப் போராட்டக் குழு ஒன்றை அமைத்தது. ஆகச்டுத் திங்கள் முதலாம் நாள் தி. மு. க. நடத்திய இந்தியெதிர்ப்பு மாநாட்டில் பல்லாயிரம் மேல் பங்கெடுத்தனர். இது கண்ட இந்தியத் தலைமை அமைச்சர் (Prime Minister) சவகர்லால் நேரு "இந்தி தமிழ்நாட்டின் மீது திணிக்கப் படாது" என்று உறுதியளித்து ஈ. வெ. கி. சம்பத்துக்கு மடல் (கடிதம்) எழுதினார். ஆனால் இந்தி திணிப்பு தொடர்ந்தது. இன்றும் தொடர்கிறது.

1963: ஏப்ரில் 9

அனைத்துக் கட்சி இந்தி எதிர்ப்புக் கூட்டம் சென்னை கடற்கரையில் நடந்தது. பல கட்சித் தலைவர்கள் இந்தி திணிப்பை எதிர்த்துப் பேசினார்கள். கூட்டத்தில் பேசிய தி. மு. க. பொதுச் செயலாளர் அண்ணாதுரையின் உரையின் பகுதிகள் பின்வருமாறு:

"தமிழ்நாட்டில் ஒவ்வொரு பட்டிதொட்டிக்கும் சென்று, 'இந்தி வருகிறது. அது தமிழர்களின்-திராவிடர்களின் தலயிலே இடி விழுவதற்கு ஒப்பாகும். ... இந்தி பேசும் மாநிலத்து மக்கள் நம்மை ஆட்டிப் படைப்பார்கள். நாம் மூன்றாந்தரக் குடிமக்களாக மதிக்கப்பட்டு, மானமிழந்து, மரியாதையிழந்து வடவருக்குத் தென்னவர்கள் அடிமைகளாக நேரும்' என்று விளக்கிட அனைவரும் முன்வரவேண்டும். ... இந்த அக்கிரமத்தைத் தடுத்து நிறுத்த நாம் போர்க்கோலம் பூணவேண்டிய காலம் வந்து விட்டது."

1963: ஆகச்டு 25

தஞ்சாவூரில் நடந்த இந்தி எதிர்ப்புக் கூட்டத்தில் தி. மு. க. பொதுச் செயலாளர் அண்ணாதுரை "இந்தி திணிப்பார் மீது போர் தொடுப்பது தமிழ் மக்களின் கடமை" என்று பேசினார்.

1963: அக்டோபர் 6

தமிழ்நாடு மாணவர்கள் இந்தி எதிர்ப்பு மாநாடு திருச்சியில் நடை பெற்றது. இன்னும் 16 மாதங்களுக்குள் (1965-ல்) தமிழ்நாட்டு மாணவர்கள் இந்தியெதிர்ப்புப் போரின் முன்னணியில் நின்று ஈகம்

(தியாகம்) பல செய்வார்கள், உயிர்ப்பலி பல கொடுப்பார்கள் என்பது குறிப்பிடத் தக்கது. அது பற்றிய விளக்கங்கள் பின்னால் தரப்படும்.

1963: அக்டோ பர் 13

சென்னை நகரிலுள்ள நுங்கம்பாக்கத்தில் நடந்த இந்தி எதிர்ப்புக் கூட்டத்தில் அறிஞர் அண்ணாதுரை தானும், பார்த்தசாரதி, பொன்னுவேலு, வெங்கா, சுந்தரம் ஆகியோரும் 1963 நவம்பர் திங்கள் 17-ம் நாளில் சென்னை கடற்கரையில் இந்தியை ஆட்சி மொழியாக அறிவித்த இந்திய அரசியற் சட்டத்தை (constitution) மக்கள் முன்னிலையில் தீ வைத்துக் கொளுத்துவதாகவும், அதன் பிறகு வருகின்ற நாட்களில் பிற திமுக தலைவர்களும், உறுப்பினரும் அதே போல தமிழ்நாடெங்கும் இந்திய அரசியற் சட்டத்தைச் சுட்டெரிப்பார்கள் என்றும் அறிவித்தார்.

1963: நவம்பர் 16

நவம்பர் 17-ல் நடை பெறவிருந்த இந்திய அரசியற் சட்ட எரிப்பைத் தடை செய்யுமாற்றான் நவம்பர் 16-ம் நாளிலேயே அண்ணாதுரை, பார்த்தசாரதி, பொன்னுவேலு, வெங்கா, சுந்தரம் ஆகிய ஐவரும் தளை செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டனர். வருகின்ற நாட்களில் இது போல இந்திய அரசியற் சட்டத்தை எரித்தாரும், எரிக்க முயன்றாருமாக பலர் தமிழ்நாடெங்கும் தளை செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டனர். இத்தகைய நிகழ்சிகள் 1964-லும் நடந்தன.

1963: டிசம்பர் 5

1963 நவம்பர் 16-ல் சிறையிலடைக்கப் பட்ட ஐவரும் டிசம்பர் 5-ம் நாளில் சென்னையிலுள்ள எழும்பூர் அறமன்றத்துக்கு (நீதிமன்றத்துக்குக்) கொண்டு வரப்பட்டனர். அண்ணாதுரை நடுவரிடம் (நீதிபதியிடம்) கூறிய உரையின் சில பகுதிகள் பின்வருமாறு:

"ஒரு பகுதி மக்களுக்கு மட்டுமே தாய்மொழியாக உள்ள ஒரு மொழியை (இந்தி மொழியை) இந்தியாவின் எல்லாப் பகுதி மக்களுக்கும் ஆட்சி மொழியாக ஆக்கிவிடுவது கொடுங்கோன்மை. அதன் விளைவாக இந்தியாவின் ஒரு பகுதிக்கு நிரந்தரமான சலுகையும் உயர்வும் ஏற்பட்டு, மற்ற பகுதிகள் இருட்டறையில் தள்ளப்பட்டுப் போய்விடும். ... இந்தியை ஆட்சி மொழியாக்குவது

தமிழகத்தின் தொன்மை வாய்ந்த மொழி, பண்பாடு ஆகியவற்றைப் பாழ்படுத்தி விடும். ... இந்தி பேசாத மக்கள் வாழும் பகுதிகளில் இந்தத் தலைமுறைக்கும், எதிர்காலத் தலைமுறைகளுக்கும் அளவிட முடியாத கேடு ஏற்படும்."

டிசம்பர் 16-ம் நாள் நடுவர் தீர்ப்பு வழங்கினார். இந்திய அரசியற் சட்டத்தை எரிக்க முன்வந்த ஐவருக்கும் தலா ஆறு மாத சிறைத் தண்டனை கொடுக்கப்பட்டது.

1964

1964 முழுவதும் தமிழ்நாடெங்கும் இந்திய அரசியற் சட்ட எரிப்புப் போராட்டங்களும், நடுவண்ணரசு அலுவலகங்கள் முன் மறியல்களும் திமுக-வால் நடத்தப்பட்டன. பல நூறு பேர் தளை செய்யப்ப பட்டு சிறையிலடைக்கப்பட்டனர்.

## 3. 1965: எரிமலை குமுறியது

### 3.1 தமிழ்நாடெங்கும் கறுப்புக் கொடிகள்

இந்திய அரசியற்சட்டத்தின் படி 1965 சனவரித் திங்கள் 26-ம் நாளிலிருந்து இந்தி இந்தியாவின் ஒரே ஆட்சி மொழியாக வருவதாக இருந்தது. (அதுவரையிலும் இந்தியும் ஆங்கிலமும் பயன்படுத்தப் பட்டன. அன்றிலிருந்து இந்தி மட்டுமே பயன்படுத்தப்படும்.) அதனால், திராவிட முன்னேற்ற கழகம் (திமுக) 1965 சனவரி 26-ம் நாளைத் துக்க நாளாக அறிவித்து, திமுக தொண்டர்களை அந்நாளில் கறுப்புக் கொடிகளைப் பறக்க விடும்படிகேட்டுக் கொண்டது. தமிழ்நாட்டுக் காவற்துறை (police department) அண்ணாதுரை உட்பட திமுக தலவர்கள் பலரை சனவரி 25 இரவில் தளை செய்தது (கைது செய்தது). ஆனாலும் சனவரி 26-ல் திமுக தொண்டர்கள் தமிழ்நாடெங்கும் கறுப்புக்கொடி பறக்க விட்டனர். தலைவர்கள் தளை செய்யப்ப்பட்டதும், தளை செய்யப்படாத தலைவர்களும், தொண்டர்களும் கறுப்புக் கொடி பறக்க விட்டதும் இந்திய அரசை உறுத்தியதென்றாலும், 25, 26-ம் நாட்களில் நடந்த வேறு சில இந்தியெதிர்ப்பு நிகழ்சிகள் தமிழ்நாட்டை மட்டுமல்ல, இந்தியத் துணைகண்டத்தை மட்டுமல்ல, உலகையே அதிர வைத்தது. அந்நிகழ்சிகளை பகுதி 2.2 முதல் 2.5 வரையிலும் தருகிறோம்.

### 3.2 தீக்குளிப்புகள்

தீக்குளிப்பு என்றால் என்ன? ஒருவர் தம் உடல் மீது கன்னெய் (மண்ணெண்ணை அல்லது பெற்றோல்) ஊற்றி, தீக் கொளுத்தி, தம் உடலையே கருக்கித் தற்கொலை செய்வதே தீக்குளிப்பு (selfimmolation). தமிழ்நாட்டுத் தேசியப்பாவலர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் தீக்குளிப்பை "கன்னெய் முழுகிக் கனல் குளித்தல்" எனப் பாடினார்.

இந்தி எதிர்ப்புப் போராட்டத்துக்கு முன்னால் தமிழ்நாட்டில் யாரும் தீக்குளிப்பு செய்ததாக வரலாறு இல்லை. உலகிலேயே இதற்கு முன்னால் ஒரேயொரு போராட்டத்தில் தான் தீக்குளிப்பு நடந்துள்ளது. 1963-ல் புத்தமதச் சாமியார்கள் சிலர் அந்நாளைய தெற்கு வியத்னாமிய அரசின் புத்தமத எதிர்ப்புச் செயல்களை எதிர்த்துத் தீக்குளித்து இறந்தார்கள். உலக அளவிலேயே தெற்கு வியத்னாமிய புத்த சாமியார்களின் தீக்குளிப்புகளே முதல் முறை. தமிழ்நாட்டில் நடந்த இந்தி எதிர்ப்பு தீக்குளிப்புகள் இரண்டாம் முறை.

இந்தி திணிப்பை எதிர்த்துத் தீக்குளித்த மாவீரர்களின் **பெயர்கள் பின்வருமாறு**:

அய்யம்பாக்கம் வீரப்பன்

கீழப்பழுவூர் சின்னசாமி

கீரனூர் முத்து

கோடம்பாக்கம் சிவலிங்கம்

மாயாவரம் சாரங்கபாணி

சத்தியமங்கலம் முத்து

விருக்கம்பாக்கம்அரங்கனாதன்

3.3 <u>சென்னைப் பல்கலைக் கழக மாணவர் போராட்டம்</u>

சனவரி 26-ம் நாள் விடுமுறை நாள் என்பதால், சென்னைப் பல்கலைக் கழக (University of Madras) மாணவர்கள் சனவரி 25-ம் நாளில் ஒரு-நாள் இந்தி திணிப்பு எதிர்ப்புப் போராட்டம் நடத்துவது என்று முடிவெடுத்து, சனவரி 25-ல் போரட்டம் நடத்தினார்கள். (1965-ல் தமிழ்நாட்டில் இரண்டு பல்கலைக் கழகங்கள் தான்இருந்தன.

சென்னை பல்கலைக் கழகமும், அண்ணாமலை பல்கலைக் கழகமும். சிதம்பரத்திலுள்ள கல்லூரிகளைத் தவிர, பிற தமிழ்நாட்டுக் கல்லூரிகளெல்லாம் சென்னை பல்கலைக் கழகத்துடன் இணைந்திருந்தன. சிதம்பரத்திலுள்ள கல்லூரிகள் அண்ணாமலைபல்கலைக் கழகத்துடன் இணைந்திருந்தன. இன்று தமிழ்நாட்டில் இருக்கும் பிற பல்கலைக் கழகங்கள் எல்லாம், 1965-க்குப் பின்னர்தொடங்கப்பட்டவையே.)

கல்லூரி மாணவர்கள் 1965 சனவரித் திங்கள் 25-ம் நாளில் இந்தி திணிப்பையெதிர்த்து போராட்டத்தில் குதித்தனர். பல பள்ளி மாணவர்களும் போராட்டத்தில் ஈடுபட்டனர். தமிழ்நாட்டுப் பொது மக்களும் இப்போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்தனர். போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் தமிழ்நாடெங்கும் கடைகள் மூடப்பட்டன. மாணவர்கள் இந்திதிணிப்பையெதிர்த்து முழக்கமிட்டபடி ஊர்வலம் வந்தார்கள். இதுபோன்றதோர் மக்கள் எழுச்சியை தமிழ் நாடு அதுவரையிலும் கண்டதில்லை. இரண்டு நாட்களுக்குப்பின் சனவரி 27-ல் நடந்த போராட்டம் ஒருவேளை இதனையும் மிஞ்சியிருக்கலாம். இவற்றுக்குப் பின் இவை போன்ற மாபெரும் ஊர்வலங்களை தமிழ்நாடு கண்டதில்லை. ஆங்கிலேயன் ஆட்சியை எதிர்த்து நடந்த ஊர்வலங்கள், சனவரி 25-ல் நடந்த இந்தியெதிர்ப்பு ஊர்வலங்களோடு ஒப்பிட்டுப்பார்க்கும் போது மிகச் சிறிதேயாம். ஆங்கிலேயன் ஆட்சி காலம் முழுவதும், அவ்வாட்சியை எதிர்த்துத் தமிழ்நாட்டில் நடத்தப்பட்ட எல்லா ஊர்வலங்களிலும், போராட்டங்களிலும் ஈடுபட்டோர் தொகையை கூட்டிப் பார்த்தால், அத்தொகை 1965 சனவர் 25 என்ற ஒரே நாளில் நடந்த இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கெடுத்தோர் தொகையை விடச் சிறியதாம்.

சனவரி 25-ல் சென்னை நகரில் 50,000-க்கு மேற்பட்டோ ர்இந்தியெதிர்ப்பு ஊர்வலத்தில் ஈடுபட்டனர். பிற தமிழ்நாட்டு நகரங்களிலும் பெரிய ஊர்வலங்கள் நடைபெற்றன. மாணவர்கள் சிலர் இந்தியெதிர்ப்பு வரிகள் எழுதப்பட்ட வண்ணத்தட்டைகளையும், கொடிகளையும் ஏந்திச் சென்றனர். மாணவர்கள் எழுப்பிய இந்தி எதிர்ப்பு முழக்கங்கள் தெருவோரங்களிலே கூடி நின்று ஊர்வலங்களைப் பார்த்த பொது மக்களைச் சிலிர்க்கவைத்தது. சில நகரங்களில் மாணவர்கள் தாரை, தப்பட்டை அடித்தும், முரசொலித்தும், சங்கூதியும் ஆர்ப்பரித்தனர். கோவை நகரில் மாணவர்கள் இந்தி அரக்கியின் "பிணத்தை" மாரடித்து, ஓலமிட்டுத் தூக்கிச் சென்றனர்.

இவ்வூர்வலங்கள் அமைதியாக நடை பெற்றன. மாணவர்கள் எந்தவித வன்முறையிலும் ஈடுபடவில்லை.

ஆனால் மதுரையில் நடைபெற்ற ஊர்வலத்தின் இறுதியில், குருதி (இரத்தம்) காணும் நிலை ஏற்பட்டது. அன்றைய ஆளும் கட்சியான பேராயக் கட்சியைத் தழுவிய தொழிலாளர் கழகத்தினைச் (a trade union affiliated with the Congress Party) சார்ந்த சிலர் மாணவர்களை அரிவாள் கொண்டு தாக்கினர். மாணவர் ஒருவர் காயமடைந்தார். இவ்வாறாக 1965 இந்தியெதிர்ப்புப் போராட்டத்தில் குருதி வழிந்தது. வரும் நாட்களில் தமிழ்நாட்டு நகரங்களின் தெருக்கள் பலவற்றில் பெருவாரியாக இந்தியெதிர்ப்புத் தமிழ் மறவர்தம் குருதி வழியும். தமிழ்நாடே போர்க்களம் போலாகும்.

3.4 <u>அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவர் போராட்டம்</u>

சிதம்பரம் நகரிளுள்ள அண்ணாமலை பல்கலைக் கழக (AnnamalaiUniversity) மாணவர்களும்  இந்தி திணிப்பையெதிர்த்துப் போராட்டம் நடத்தினார்கள். இந்தியெதிர்ப்பு முழக்கங்கள் எழுதப்பட்ட பெரிய அட்டைகளும், கொடிகளும் ஏந்தி, இந்தியெதிர்ப்பு முழக்கங்களை ஒலித்தபடி மாணவர்கள் பல்கலைக்கழக விளாகத்திலிருந்து ஊர்வலம் தொடங்கினர். தாரை தப்பட்டைகள் முழக்கினர். சங்கூதினர். ஊர்வலம் எந்தவொரு வன்முறையுமின்றித் தொடங்கியது. ஆனால், காவல்துறையினர் (police) ஊர்வலம் சிதம்பரம் நகருக்குள் போகலாகாதென்று கூறி ஊர்வலத்தைத் தடுத்தனர். மாணவர்கள் அதற்கிணங்காமல் தொடர்ந்து அமைதியாக முன்னேறினர். காவலர்கள் (police) ஊர்வலத்தைக் கலைக்குமாற்றான் துமுக்கியால் (துப்பாக்கியால்) ஊர்வலத்தை நோக்கிச் சுட்டார்கள். காவலர்கள் இழுவைத் தோட்டாகளைப் பயன்படுத்திச் சுட்டிருக்கலாம். அதுயாரையும் கொன்றிருக்காது. (இழுவைத் தோட்டா = இரப்பர்தோட்டா = rubber bullet) ஆனால் மேலதிகாரிகளிடமிருந்து வந்த ஆணைப்படி எக்குத் தோட்டக்களைப் (steel bullets) பயன்படுத்தினார்கள். இராசேந்திரன் என்ற மாணவர் துமுக்கிச்சூடு பட்டு இறந்தார். நெடுமாறன் என்ற மாணவர் படுகாயமடைந்தார்.

3.5 <u>தமிழ்நாட்டுத் தெருக்களில் குருதியோட்டம்: சனவரி 27 - பெப்ருவரி 14</u>

சனவரி 25-ம் நாளில் மதுரையில் ஆளும் கட்சியான பேராயக்கட்சியைத் தழுவிய தொழிலாளர் கழகத்தினைச் (a trade unionaffiliated with the Congress Party) சார்ந்த சிலர் மாணவர்களை

அரிவாள் கொண்டு தாக்கியதும், காவலர்கள் (police) சிதம்பரமத்தில் மாணவர்களின் ஊர்வலத்தில் துமுக்கிச்சூடு (துப்பாக்கிச் சூடு) நடத்தியதும், தமிழ்நாடெங்கும் மாணவர்களைக் கொதிக்கவைத்தது. சனவரி 27-ல் தமிழ்நாடெங்கும் மாணவர்கள் கண்டன ஊர்வலங்கள் நடத்தினர். சனவரி 25-ல் நடந்த ஊர்வலங்களைப் போலவே இவ்வூர்வலங்களும் மிகப் பெரிதாயிருந்தன. பொதுமக்கள் மாணவர்களை முற்றிலும் ஆதரித்தனர். மாணவர் போராட்டத்தை ஆதரித்து கடைகள் மூடப்பட்டன. பொதுமக்கள் தெருவோரங்களில் மிக அமைதியாக நின்று ஊர்வலங்களை பார்த்தார்கள். தமிழ்நாட்டு மாணவர் இந்தியெதிர்ப்புப் போராட்டச் செயற்குழு (Tamil Nadu Students Anti-Hindi Agiotation Committee) வரையறையற்ற போராட்டத்தை (indefinite strike) அறிவித்தது.

தமிழ்நாட்டு மாணவர்கள் நடத்திய மிகப்பெரிய இந்திதிணிப்பு எதிர்ப்பு ஊர்வலங்களும், அவற்றுக்குத் தமிழ்நாட்டுப் பொது மக்கள் கொடுத்த ஆதரவும் தில்லியிலுள்ள இந்திய அரசுக்கு திகிலேற்படுத்தியது. இந்தியத் தலைமையமைச்சர் இலால் பகதூர் சாத்திரி (Prime Minister Lal Bahadur Shastri), உள்நாட்டுத் துறை அமைச்சர் குல்சாரிலால் நந்தா (Home Minister Gulzarilal Nanda) மற்றும் தமிழ்நாட்டு மாநில முதலமைச்சர் பக்தவத்சலம் ஆகியோர் தமிழ்நாட்டு மாணவர்களின் இந்தி எதிர்ப்புப் போரை படைவலியோடு நசுக்குவதென முடிவு செய்தனர். பிற மாநிலக் காவல்துறையினர், இந்திய நடுவண் காவல்துறையினர் மற்றும் பட்டாளத்தினரை (out-of-state police, Indian Central Reserve Police and army) பேருந்துவண்டிகள் மூலமும், தொடர்வண்டிகள் மூலமும் (by trucks and rail) தமிழ்நாட்டுக்குக் கொண்டுவந்து குவித்தனர். அமைதியாக இந்திய நடுவண் அரசு நிறுவனங்கள், அஞ்சல் நிலையங்கள் மற்றும் தொடர்வண்டி நிலையங்கள் முன் ஆர்ப்பாட்டங்கள் (demonstrations) நடத்திய மாணவர்களை காவல்துறையினர் தடியால் தாக்குவதும், அதனால் சினங்கொண்ட மாணவர்கள் காவலர் மேல் கல் வீசுவதும், உடனடியாக காவல்துறையினரும்,  பட்டாளக்காரரும் துமுக்கியால் சுடுவதும் பெரிய நகரங்கள் முதல் சிறிய நகரங்கள் வரையிலும் பலவிடங்களில் நடந்தன. துமுக்கிச் சூடால் பலர் காயப்பட்டு வீழ்வதையும், சிலர் சாவதையும் கண்டு மாணவரும், பொது மக்களும் சிலவிடங்களில்அஞ்சல் நிலையங்களுக்கும், தொடர் வண்டி நிலயங்களுக்கும் தீவைத்தனர். தமிழ்நாடே போர்க்களம் போலாயிற்று. தமிழ்நாட்டுத் தெருக்களில் தமிழ் மறவர் தம் குருதி பாய்ந்தது. இந்நிலை ஏறத்தாழ இரண்டு கிழமைகளாகத் தொடர்ந்தது. எத்துணை தான் அடக்குமுறைகளை அவிழ்த்து

விட்டாலும், எத்துணையோ பேர் துமுக்கிச் சூட்டில் கொல்லப்பட்டாலும் இந்தி எதிர்ப்புப் போர் தொடர்ந்து நடை பெறுவதைக் கண்ட இந்திய அரசு, இனி இந்தி திணிப்பு இருக்காது என்றும் அதற்குத் தேவையான சட்டம் நிறைவேற்றப்படும் என்றும் அறிவித்தது. தமிழ்நாட்டு மாணவர்கள் தங்கள் போராட்டத்தை நிறுத்தினார்கள். இந்திய அரசு அன்று கொடுத்த வாக்குறுதி வக்கில்லாமலேயே போயிற்று. 1968 ஆகத்துத் திங்கள் முதல் நாளில் இந்தியப் பாராளுமன்றம் ஆட்சிமொழி குறித்த ஒருசட்டத்தை நிவேற்றியது. இது தமிழ்மக்கள் எதிர்பார்த்த சட்டமல்ல. இது ஏனோதானோவென்ற உப்புச்சப்பற்ற, சாரமில்லாத சட்டம். இன்னும், இன்றும் இந்தி திணிப்புதொடரத்தான் செய்கிறது.

3.6 <u>எத்தனை பேர் கொல்லப் பட்டார்கள்?</u>

1965-ல் எத்துணை பேர் துமுக்கிச் சூட்டுக்குப் பலியானார்கள், எத்துணைபேர் கை, காலிழந்தார்கள், எத்துணை பேர் வேறுவகையில் காயப்பட்டார்கள் என்று உறுதியாகச் சொல்லமுடியாது. ஏனெனில், இரண்டு ஆண்டுகளுக்குப்பின் 1967-ல் நடந்த தேர்தலில் 1965-ல் ஆளுங்கட்சியாகவிருந்த பேராயக்கட்சி (Congress Party) தமிழ்நாட்டில் படுதோல்வியடைந்து தமிழ்நாட்டு மாநில ஆட்சியை இழந்தது. ஆட்சியைக் கைவிடு முன்னால் தமிழ்நாட்டு அரசு 1965-ல் நடந்த துமுக்கிச் சூடுகளில் இறந்தோர் எண்ணிகை பற்றிய விவரங்களையும் அழித்துவிட்டதாகக் கூறப்படுகிறது.

தமிழ்ச் செய்தியிதழ் தினத்தந்தியில் அந்நாட்களில் நாளுக்கு நாள் வந்த சாவு எண்ணிக்கைகளைக் கூட்டிப் பார்த்தால் அந்த மொத்தம் 63. செய்திகளை ஆழப் படிக்கும் போது, சூடு பட்ட இடத்திலேயே இறந்து பட்டோரின் எண்ணிக்கையும், சுடுபட்ட இடத்திலிருந்து மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லும் போது இறந்து பட்டோரின் எண்ணிக்கையுமே 63 என்பது போல தெரிகிறது.
மருத்துவமனையில் அடுத்த நாளோ அதன் பிறகோ இறந்தவர்கள் எண்ணிக்கை இதில் அடங்காது என்பது போல தெரிகிறது. எவ்வாறாயினும் குறைந்தது 63 இந்தியெதிர்ப்புப் போர் மறவராவது 1965-ல் சுட்டுக் கொல்லப் பட்டிருக்கிறார்கள். இதில் பெப்ருவரி 12-ம் நாளிலே சுட்டுக் கொல்லப் பட்டோரின் எண்ணிக்கை 31. பெப்ருவரி 12, 1965 தமிழ்நாட்டு வரலாற்றிலே குருதி (அரத்தம்) தோய்ந்த நாள்.

சுட்டுக் கொல்லப் பட்டோர் 63 பேரென்றால், கையிழந்தார், காலிழந்தார், பிற வகையில் காயப்பட்டார் எத்தனையோ?

## 4. 1967: பொதுத் தேர்தல்

1967-ல் நடந்த இந்தியப் பாராளுமன்ற, தமிழ்நாட்டு மாநில சட்டசபைத் தேர்தலில் (Indian parliament and Tamil Nadu State legilative assembly elections) தமிழ்நாட்டு மக்கள் தங்களது இந்தியெதிர்ப்புணர்வைக் காட்டுமாற்றான் அன்றைய ஆளும்கட்சியான பேராயக்கட்சிக்கெதிராகவும், அக்கால் இந்தியெதிர்ப்பைத் தம் தலையாய கொள்கையாகக் கொண்டிருந்த திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு ஆதரவாகவும் ஒப்போலையிட்டார்கள் (ஒப்போலை = vote). பேராயக்கட்சி படுதோல்வியடைந்தது. தமிழ்நாட்டு மாநில ஆட்சியை இழந்தது. பேராயக் கட்சியைச் சார்ந்த முதலமைச்சர் பக்தவத்சலம் உட்பட எல்லா பேராயக் கட்சி அமைச்சர்களும் தமிழ்நாட்டில் தோல்வியடைந்தார்கள். திராவிடமுன்னேற்றக் கழகம் (திமுக) பெருவெற்றிபெற்று தமிழ்நாட்டு மாநிலஆட்சியைக் கைப்பற்றியது. ஆனால் மாநில அரசு இந்திய ஆட்சிமொழிக் கொள்கையைப் பற்றி யாதும் செய்து விட முடியாது. அவ்வதிகாரம் இந்திய நடுவணரசிடம் இருக்கிறது. இந்தி திணிப்பு இன்றும் தொடர்கிறது.

## 5. 1968: தமிழ்நாடு விடுதலைக் குரல்

1965-ல் பொதுமக்களின் ஆதரவோடு மாணவர்கள் நடத்திய மாபெரும் இந்தியெதிர்ப்புப் போரட்டங்களுக்குப் பின்னும், 1967-ல் நடந்த பொதுத் தேர்தலில் இந்தியெதிர்ப்புச் சின்னமாகக் கருதப்பட்ட பேராயக் கட்சி தமிழ்நாட்டில் படுதோல்வியடைந்த பின்னும், இந்தி திணிப்பு தொடர்வதைக் கண்ட தமிழ்நாட்டு மாணவர்கள் 1967-லும், 1968-லும் சில ஊர்வலங்களும், கண்டனக் கூட்டங்களும் நடத்தினார்கள். மாநில ஆட்சி திமுக கையிலிருந்த்தால் காவல்துறை இவற்றைத் தடுக்கவில்லை. ஊர்வலங்களும், கண்டனக் கூட்டங்களும் அமைதியாக நடந்தன.

கோயம்புத்தூர் (கோவை) மாணவர்கள் நடத்திய இந்தியெதிர்ப்பு ஊர்வலத்தின் இறுதியில் நடந்த நிகழ்ச்சியொன்று குறிப்பிடத் தக்கது. கூட்டத்தின்  இறுதியில் நடந்த நிகழ்ச்சி குறிப்பிடத் தக்கது. ஊர்வலம் கோவை நகரிலுள்ள வ. உ. சிதம்பரனார் பூங்காவில் முடிவுற்றது. அதைத் தொடர்ந்து பூங்காவில் கண்டனக் கூட்டம் நடந்தது. கோவை மாணவர் இந்தி எதிர்ப்புக் குழுத்தலைவர் ஒருவர் ஆற்றியசொற்பொழிவின் போது, "தமிழ்நாடு இந்தியாவினின்று விடுதலை பெற்றுத் தனி நாடாக அமைவதொன்றே இந்தி திணிப்பைத் தடுக்கும்" என்று சொன்னார். சொற்பொழிவை முடித்துக்கொண்டு, தமிழ்நாட்டுத் தேசியக் கொடியை பூங்காவின்

கொடிக்கம்பத்தில் ஏற்றினார். கூடியிருந்த மாணவர்கள் தமிழ்நாட்டுக் கொடிக்கு வணக்கம் செய்தார்கள். கூட்டம் முடிந்தது. மாணவர்களெல்லாரும் பூங்காவை விட்டு வெளியேறியபின் காவற்றுறையினர் கொடியைக் கீழிறக்கினர்.

## 6. தேங்கிக்கிடக்கும் கசப்புணர்வுகள்

1965-ல் நடந்த தமிழ்நாட்டு மாணவர் இந்தியெதிர்ப்புப்போராட்டம் இந்தி திணிப்பைத் தடுக்கும், இந்தி இந்தியாவின்ஆட்சிமொழியாவது தடுக்கப்படும் எனத் தமிழ்நாட்டு மக்களும், மாணவர்களும் நினைத்திருந்தனர். 1965-ல் நடத்தப்பட்டஇந்தியெதிர்ப்புப் போராட்டத்தை விடவும் பெரியதொரு போராட்டத்தை பொதுமக்களும், மாணவர்களும் நடத்தி விடமுடியாது. எப்பேர்ப்பட்ட போராட்டம் அது. இந்தியத் துணைக்கண்டமே அதுவரையிலும் கண்டிராததொரு பெரும் போராட்டமல்லவா அது. இந்தியாவில் ஆங்கிலேயன் ஆட்சியை எதிர்த்து நடத்தப்பட்ட ஊர்வலங்களை விட 1965 சனவரி 25-லும், 27-லும் இந்தி திணிப்பை எதிர்த்துத் தமிழ்நாட்டில் நடந்தஊர்வலங்கள் மிக மிகப் பெரிது. அது மட்டுமா? இந்தியாவே அதுவரையிலும் கண்டிராத வகையில் தமிழ் மறவர் எழுவர் தீக்குளித்துத் தம்முயிரையே தமிழன்னைக்குத் தந்து, தம் இந்தியெதிர்ப்புணர்வை வெளியிட்டனரே. போராட்டத்தையடக்குமாற்றான் அரசு நடத்திய துமுக்கிச்சூட்டில் (துப்பாக்கிச் சூட்டில்) தமிழ் இளையோர் பலர் கொல்லப்பட்டனர். இவ்வாறு கொல்லப்பட்டார் தொகை 63. கையிழந்தார், காலிழந்தார், வேறு வகையில் காயமுற்றார் எத்தனை பேரோ?

1965-குப் பின் தமிழ்நாட்டில் பெரியதோர் இந்தியெதிர்ப்புப் போராட்டம் நடை பெறாததைக் கண்டு, தமிழ்நாடு இந்தி திணிப்பை ஏற்றுக் கொண்டு விட்டது என்று கருதக்கூடாது. இந்திய அரசுக்கு ஒரு சவால். அடுத்த பொதுத்தேர்தலின் போது "இந்தியாவின் ஆட்சி மொழியாக இந்தியை ஏற்றுக் கொள்வீர்களா?" என்றொரு கேள்வியைக் கேளுங்கள். பெரும்பான்மையான தமிழ்நாட்டு மக்கள் "ஏற்றுக்கொள்கிறோம்" எனப் பதிலளித்தால், அன்று முதல் என் வாணாள் முழுவதும் இந்தி படிப்பதிலும், இந்தியைத்தமிழ்நாட்டிலே பரப்புவதிலும் செலவிடுவேன் என அன்னைத்தமிழ் மேல் ஆணையிடுகிறேன்.

இந்தியெதிர்ப்புணர்வு இன்றும் தமிழ்மக்களின் நெஞ்சங்களிலே இருக்கத்தான் செய்கிறது. தொடர்ந்து இந்தி திணிக்கப்படுவதைப் பற்றிய சினம் என்று, எப்படி எரிமலையாய் வெடிக்குமோ

யாருக்கும் தெரியாது. அரிமாவைக் (சிங்கத்தை) கூண்டுக்குள் அடைத்து வைத்து, பசி போட்டு, அடிகொடுத்து வேடிக்கை விளையாட்டுகள் (circus tricks) செய்ய வைக்கலாம். அதனால் அவ்வரிமா மகிழ்ச்சியோடு வேடிக்கை விளையாட்டுகள் செய்கிறது என்று யாரும் நினைத்து விடக்கூடாது. வாய்ப்புக் கிடைத்தால் தப்பி ஓடத்தான் செய்யும். இந்தி திணிப்பைப் பற்றிய தமிழ்மக்களின் எரிச்சலுணர்வு ஒருநாள் எரிமலையாய் வெடிக்கத்தான் போகிறது.

"இந்தி வருகிறது. அதுதமிழர்களின்-திராவிடர்களின் தலயிலே இடி விழுவதற்குஒப்பாகும். ... இந்தி பேசும் மாநிலத்து மக்கள் நம்மை ஆட்டிப்படைப்பார்கள். நாம் மூன்றாந்தரக் குடிமக்களாக மதிக்கப்பட்டு, மானமிழந்து, மரியாதையிழந்து வடவருக்குத் தென்னவர்கள் அடிமைகளாக நேரும்" - தி. மு. க. பொதுச்செயலாளர் அறிஞர் அண்ணா (கா. ந. அண்ணாதுரை) ஏப்ரில் 9, 1963-ல் சென்னையில் நடந்த இந்தி எதிர்ப்புக் கூட்டத்தில் ஆற்றிய உரை (அண்ணாதுரை 1967-ல் தமிழ்நாடு மாநில முதலமைச்சராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1969-ல் புற்றுநோயால் (cancer) காலமாகும் வரையிலும் முதலமைச்சராகப் பணியாற்றினார். தமிழ்நாடு மாநில முதலமைச்சர் இந்தி திணிப்பைத் தடுத்து விட முடியாது. அந்த அதிகாரம் இந்தியப் பாராளுமன்றத்திடம் தான் இருக்கிறது.)

## குறிப்பேடு

1. "Should my Son Learn Hindi?", Hindi Imposition Papers: Volume 4 (edited by Thanjai Nalankilli), Free English e-book available on the Internert.

முதல் பக்கத்துக்குப் போக இங்கே கிளிக்கடிக்க அல்லது அடுத்த பக்கத்தில் இரண்டாம் கட்டுரையைப் படிக்க

.

## தீக்குளிதுயிர் நீத்த தமிழ் மறவர் எழுவர் (1965)

தஞ்சை நலங்கிள்ளி

**<u>உள்ளடக்கம்</u>**

1. முன்னுரை

2. பொன்னெழுத்துப் பெயர்ப் பட்டியல்

3. வாழ்க்கைக் குறிப்புகள்

4. தீக்குளிப்பு வரலாறு

5. இனி தீக்குளிப்புகள் தேவையில்லை

### இக்கட்டுரையில் வரும் தூயதமிழ்ச் சொற்கள் சில

ஈகம் - தியாகம்

ஈகப் பெருமக்கள் - தியாகிகள்

கன்னெய் - பெட்றோல்; petrol, gasoline

தீக்குளித்தல் - self immolation

மண்ணெண்ணை - kerosine

மடல் - கடிதம்

நடுவண் அரசு - central government

**<u>1. முன்னுரை</u>**

1965-ல் நடந்த இந்தி எதிர்ப்புப் போரின் போது தமிழுணர்வு மிக்க எழுவர் தமிழர்தம் இந்தியெதிர்ப்புணர்வை இந்திய அரசுக்கும், உலகுக்கும் காட்டுமாற்றான் தம் உடலைத் தீக்கிரையாக்கித் தம்மையே பலியாக்கினர். தம்முடலில் கன்னெய் அல்லது மண்ணெண்ணை ஊற்றித் தீ வைத்துத் தம்முடலை எரித்துக் கரியாக்கித் தம்முயிரை அர்ப்பணிக்கும்இச்செயலைத்

"தீக்குளித்தல்" என்பர் தமிழ் மக்கள். (ஆங்கிலத்தில் "self immolation" என்பர்.) பாவலரேறு பெருஞ்சித்திரனார் இவ்வீரச்செயலை "கன்னெய் மூழ்கிக் கனல் குளித்தல்" எனப்பாடினார். (கன்னெய் - petrol, gasoline; மண்ணெண்ணை - kerosine)

இவ்வேழு ஈகப் பெருமக்கள்தம் வாழ்க்கைக் குறிப்புகளை இக்கட்டுரையில் தருகிறோம் (ஈகம் = தியாகம், ஈகப் பெருமக்கள் = தியாகிகள்).

**2. பொன்னெழுத்துப் பெயர்ப் பட்டியல்**

1. கீழப்பழுவூர் சின்னசாமி (சனவரி 25, 1965)

2. கோடம்பாக்கம் சிவலிங்கம் (சனவரி 26, 1965)

3. விருகம்பாக்கம் அரங்கநாதன் (சனவரி 27, 1965)

4. அய்யம்பாளயம் வீரப்பன் (பெப்ருவரி 11, 1965)

5. சத்தியமங்கலம் முத்து (பெப்ருவரி ?, 1965)

6. மாயவரம் சாரங்கபாணி (மார்ச் ?, 1965)

7. கீரனூர் முத்து (தீக்குளித்த நாள்?)

3. வாழ்க்கைக் குறிப்புகள்

எமக்குத் தெரிந்த விவரங்கள் அனைத்தையும் இங்கு தொகுத்துத் தருகிறேன்.

3.1 கீழப்பழுவூர் சின்னசாமி

தீக்குளித்த நாள்: சனவரி 25, 1965

வயது: 27

பிறந்த இடம்: கீழப்பழுவூர், திருச்சி மாவட்டம்

குடும்பம்: ஆறுமுகம் - தங்கம்மாள் இணையரின் ஒரே மகன். மனைவி கமலா. ஒரே மகள் திராவிடச் செல்வி.

பிற: தீக்குளிப்பதற்கு முன்னால் தனது மைத்துனனுக்கு,"தமிழைப் பாதுகாப்பதற்காக நான் சாகவிருக்கிறேன். என் குறிக்கோள் ஒருநாள் நிறைவேறும்" என்று ஒரு மடல் விடுத்திருந்தார். தாம் தீக்குளித்துச் சாம்போது, *"தமிழ் வாழ்க! இந்தி ஒழிக!" என உரக்கக் குரலெழுப்பினார்.

3.2 கோடம்பாக்கம் சிவலிங்கம்

தீக்குளித்த நாள்: சனவரி 26, 1965

தீக்குளித்த இடம்: கோடம்பாக்கம் தொடர்வண்டி நிலயத்துக்கு முன்னே

வயது: 21

பிற: கோடம்பாகத்துக்கு அருகேயுள்ள விசுவனாதபுரத்தில் வாழ்ந்தார். சென்னை நகராட்சிமன்றத்தில் (Madras City Corporation) வேலை பார்த்தார். தீக்குளிக்கு முன்னால், *"உடல்மண்ணுக்கு, உயிர் தமிழுக்கு" என்றொரு மடல் எழுதியிருந்தார்.

3.3 விருகம்பாக்கம் அரங்கநாதன்

தீக்குளித்த நாள்: சனவரி 27, 1965

வயது: 33 (பிறந்த நாள் - திசம்பர் 27, 1931)

குடும்பம்: ஒயல்லி - முனியம்மா இணையரின் மூன்றாம் மகன். திருமணமாகி மூன்று பிள்ளைகள் இருந்தன.

பிற: சென்னையிலுள்ள விருகம்பாக்கத்தில் வாழ்ந்தார். தொலைபேசித் துறையில் (telephone department) வேலைபார்த்தார். தாம் தீக்குளிப்பதற்கு முந்தைய நாளில் கோடம்பாக்கம் சிவலிங்கம் தீக்குளித்த இடத்தைப் போய்ப் பார்த்தார். பின்னர் இந்தி திணிப்பை எதிர்த்து இந்திய நடுவண் அரசுக்கும் (Indian Central Government) தமிழ்நாடு மாநில அரசுக்கும் அஞ்சல் அனுப்பினார். சனவரி 27-ல் தீக்குளித்தார்.

3.4 அய்யம்பாளயம் வீரப்பன்

தீக்குளித்த நாள்: பெப்ருவரி 11, 1965

வயது: 26 (பிறந்த ஆண்டு - 1938)

பிறந்த இடம்: குளித்தலைக்கு அருகேயுள்ள உத்தம பாளையம், திருச்சி மாவட்டம்

பிற: அய்யம்பாளயம் பள்ளியில் தலைமையாசிரியராய் வேலைபார்த்தார். தீக்குளிப்பதற்கு முந்தின நாள் இந்தியத் தலைமையமைச்சர் இலால் பகதூர் சாத்திரிக்கும், தமிழ்நாடு முதலமைச்சர் பக்தவத்சலத்துக்கும் இந்தி திணிப்பை எதிர்த்துமடல் எழுதினார்.

3.5 சத்தியமங்கலம் முத்து

தீக்குளித்த நாள்: பெப்ருவரி ?, 1965

வயது: 21 (பிறந்த ஆண்டு - 1943)

பிற: கோவை மாவட்டம் சத்தியமங்கலத்தில் வேளாண்மை செய்து வந்தார் (வேளாண்மை - விவசாயம்). சத்திய மங்கலத்து மக்கள் தீக்குளித் துயிர் நீத்த இவருடலை ஊர்வலமாகக் கொண்டு சென்று இம்மாவீரருக்குத் தம் நன்றியையும், மதிப்பையும்தெரிவித்தனர்.

3.6 மாயவரம் சாரங்கபாணி

தீக்குளித்த நாள்: மார்ச் ?, 1965

தீக்குளித்த இடம்: மயிலாடுதுறை அன்னதானபுரம் கல்லூரி விளாகம்

வயது: 20

பிற: மயிலாடுதுறை அன்னதானபுரம் கல்லூரியில் வணிக இளவல் (Bachelor of Commerce - B. Com) பட்டப் படிப்புக்கான இரண்டாமாண்டு மாணவர். தம்முடலுக்குத் தீ வைக்கும் போது,"தமிழ் வாழ்க! இந்தி ஒழிக!" என முழங்கினார். *"அன்னைத் தமிழுக்கு என்னுயிரைக் கொடுத்து விட்டேன்" என்பதே இவரது இறுதிச் சொற்கள்.

3.7 கீரனூர் முத்து

தீக்குளித்த நாள்: ?

வயது: 21 (பிறந்த ஆண்டு - 1943)

பிறந்த இடம்: சுனியக்காடு, புதுக்கோட்டை மாவட்டம்

பிற: கீரனூரில் வாழ்ந்தார். ஒரு விடுதியில் (hotel) வேலை பார்த்தார்.

**4. தீக்குளிப்பு வரலாறு**

ஒருவர் கன்னெய் முழுகிக் கனல் குளித்துத் தம்முடலை எரிக்கிரையாக்கிக் கொள்வதென்பது எளியதோர் செயலன்று. மட்டிலா வீரமும், ஈக உணர்வும் மிக்கோரே இதனைச் செய்ய இயலும். 1965 தமிழ்நாட்டுத் தீக்குளிப்புகளுக்கு முன்னால், நெறிகெட்ட அரசுச் செயலை எதிர்த்துத் தீக்குளித்த செயல் தெற்கு வியத்னாம் (South Vietnam) நாட்டில் மட்டுமே நடந்துள்ளது. 1965-ல் தமிழ்நாட்டில் நடந்த தீக்குளிப்புகளுக்கு இரண்டாண்டுகளுக்கு முன்னால், 1963-ல் புத்தமதச் சாமியார்கள் சிலர் அன்றைய தெற்கு வியத்னாமிய அரசின் செயல்களை எதிர்த்துத் தீக்குளித்துத் தம்முயிர் தந்தனர். 1963 சூன் திங்கள் 16-ம் நாளில் திச் குவங் டக் (Thich Quang Duc) என்ற புத்தமதச் சாமியார் தெற்கு வியத்னாமின் தலை நகரான சய்கானில் (Saigon) தீக்குளித்துயிர் நீத்தார். இதைத் தொடர்ந்து இன்னும் சில புத்தமதச் சாமியார்களும் வருகின்ற மாதங்களில் தீகுளித்தனர். தெற்கு வியத்னாம் தீக்குளிப்புகளுக்கு அடுத்ததாக நடந்த தீக்குளிப்புகள் 1965 தமிழ்நாட்டு இந்தியெதிர்ப்புப் போரின் போது நடந்த தீக்குளிப்புகளே.

தெற்கு வியத்னாமிலே 1963-ல் தீக்குளித்து உயிர் ஈந்த பெருமக்கள் வயதான, முற்றும் துறந்த புத்தமதச் சாமியார்கள். தமிழ்நாட்டிலே 1965-ல் தீக்குளித்து உயிர் ஈந்த பெருமக்களோ 20 முதல் 33 வயதிற்குட்பட்ட இளையோர். சிலர் மாணவர்கள்; சிலர்தொழிலாளிகள்; சிலர் மணமானவர்கள்; சிலர் மணமாகாதவர்கள்; சிலருக்குப் பிள்ளைகளும் உண்டு. "இந்திமொழி இந்தியாவின் ஆட்சி மொழி ஆகுமேயானால், அதனால் தமிழ் மொழியும், தமிழ்நாட்டு மக்களின் வருங்காலமும் பாழ்படும்" என்ற பேரச்சத்தாலேயே இவ்வீரப்பெருமக்கள் தீக்குளித்துத் தம்முயிரை ஈகம் செய்து, தமிழ் மக்களின் இந்தியெதிர்ப்புணர்வை உலகுக்குக் காட்டி நின்றனர். தெற்கு வியத்னாமிலே தீக்குளிப்புகள் நடந்த சில திங்களில் தியம் (Diem) தலைமியிலான தெற்கு வியத்னாமிய அரசு வீழ்ந்து பட்டது. அது போலவே இங்கும் தம் உயிர் ஈகத்தால் இந்தி திணிப்பு ஒழியலாம் என்ற எண்ணமும் இவர்களுக்கு இருந்திருக்கலாம். ஆனால் இந்தி திணிப்புஒழியவில்லை, இந்தி திணிப்பு அன்றிலும் மேலாக இன்று தொடர்கிறது.

## 5. இனி தீக்குளிப்புகள் தேவையில்லை

தமிழ் மொழி, தமிழ் மக்கள் நலங்கருதி, இந்தி திணிப்பைஎதிர்த்து 1965-ல் தீக்குளித்துயிர் தந்த பெருமக்களின் வீரத்தையும், ஈக உணர்வையும் வியந்து பாராட்டுகிறோம். அப்பெருமக்களுக்குத் தலை தாழ்த்துகிறோம். ஆனால் இனிமேலும் இந்தி திணிப்பை எதிர்த்துத் தீக்குளிக்க வேண்டியதில்லை என்று இன்றைய தமிழுணர்வாளர்களைக் கேட்டுக் கொள்கிறேன். 1965 ஆண்டைய தீக்குளிப்புகள் தமிழ் மக்கள் எவ்வளவு தூரம் இந்தி திணிப்பை எதிர்க்கிறார்கள் என்பதை உலகுக்குக் காட்டி விட்டது. அமெரிக்க, ஐரோப்பிய, ஆப்பிரிக்க, ஆசிய நாடுகளிலிருந்து வரும் செய்தித்தாள்கள் பலவும் இந்திய அரசின் இந்தி திணிப்பை எதிர்த்துத் தமிழர்கள் தீக்குளித்தார்கள் எனக் கொட்டை எழுத்துக்களில் செய்தி வெளியிட்டன. அது போதும். இனியும் தீக்குளிப்புகள் தேவையில்லை. தீக்குளிப்புகளால் இந்தி திணிப்பு முடியப் போவதில்லை. வேறு வழிபாடுகள் மூலம் அதை நிறுத்த முயல வேண்டும். அவ்வழி எவ்வழி என்று எனக்குத் தெரியவில்லை.

இந்தி இந்தியாவின் ஆட்சிமொழியாவதால் தமிழ் மொழிக்கும், தழ் மக்களின் வருங்காலத்துக்கும் தீங்கு ஏற்படும் என்பது முற்றிலும்உண்மை. திராவிட முன்னேற்றக் கழகத்தின் (தி.மு.க.) முதற் பொதுச்செயலாளரும், மேனாள் தமிழ்நாட்டு முதலமைச்சருமான **திரு கா. ந. அண்ணாதுரை** இது பற்றிச் சொன்னதாவது.

"தமிழ்நாட்டில் ஒவ்வொரு பட்டிதொட்டிக்கும் சென்று, 'இந்தி வருகிறது. அது தமிழர்களின்-திராவிடர்களின் தலையிலே இடி விழுவதற்கு ஒப்பாகும். ... இந்தி பேசும் மாநிலத்து மக்கள் நம்மை ஆட்டிப் படைப்பார்கள். நாம் மூன்றாந்தரக் குடிமக்களாக மதிக்கப்பட்டு, மானமிழந்து, மரியாதையிழந்து வடவருக்குத் தென்னவர்கள் அடிமைகளாக நேரும்' என்று விளக்கிட அனைவரும் முன்வரவேண்டும்." (1963 ஏப்ரில் 29-ம் நாளன்று சென்னை கடற்கரையில் நடந்த அனைத்துக் கட்சி இந்தி எதிர்ப்புக் கூட்டத்தில் பேசியது.)

"ஒரு பகுதி மக்களுக்கு மட்டுமே தாய்மொழியாக உள்ள ஒரு மொழியை (இந்தி மொழியை) இந்தியாவின் எல்லாப்பகுதி மக்களுக்கும் ஆட்சி மொழியாக ஆக்கிவிடுவது கொடுங்கோன்மை. அதன் விளைவாக இந்தியாவின் ஒரு பகுதிக்கு நிரந்தரமான சலுகையும் உயர்வும் ஏற்பட்டு, மற்ற பகுதிகள் இருட்டறையில் தள்ளப்பட்டுப் போய்விடும். ... இந்தியை ஆட்சி மொழியாக்குவது

தமிழகத்தின் தொன்மை வாய்ந்த மொழி, பண்பாடு ஆகியவற்றைப் பாழ்படுத்தி விடும். ... இந்தி பேசாத மக்கள் வாழும் பகுதிகளில் இந்தத் தலைமுறைக்கும், எதிர்காலத் தலைமுறைகளுக்கும் அளவிட முடியாத கேடு ஏற்படும்." (1963 திசம்பர் 5-ம் நாளன்று இந்திய அரசியற் சட்டத்தை (Indianconstitution) எரிக்க முயன்ற வழக்கின் போது நயன்மை மன்றத்தில் (court) சொன்னது)

1965-ல் இந்தி திணிப்பையெதிர்த்து தீக்குளித் துயிர் நீத்த ஈகப் பெருமக்களுக்கு வீர வணக்கம் செய்து இக் கட்டுரையை முடிக்கிறேன்!

வாழ்க தமிழ்! முடிக இந்தி திணிப்பு!

முதல் பக்கத்துக்குப் போக இங்கே கிளிக்கடிக்க அல்லது அடுத்த பக்கத்தில் நாம் வெளியிட்டுள்ள பிற இலவச நூல்களின் பட்டியலைப் பார்க்க

.

## இலவச தமிழ் நூல்கள்

கீழ்க்கண்ட நூல்களை இந்த வலைத்தளத்திலிருந்து இலவசமாகப் படிக்கலாம் அல்லது கீழிறக்கலாம். **https://archive.org/details/texts** அங்கே நூலின் பெயரைத் தேடிப் பாருங்கள்.

தமிழ்நாட்டின் இரு பொற்காலங்களும், இன்றைய இருள் காலமும் (வரலாறு) - தஞ்சை நலங்கிள்ளி
The Two Golden Ages of Tamil Nadu and the Current Dark Days (History) (Tamil book) by Thanjai Nalankilli

தமிழ்நாடு இந்தி எதிர்ப்புப் போராட்டங்களும், தீக்குளிப்புகளும் - தஞ்சை நலங்கிள்ளி
Tamil Nadu Anti-Hindi Agitations and Self-Immolations (Tamil book) by Thanjai Nalankilli

## இலவச ஆங்கில நூல்கள் (Free English books)

The following e-books are available FREE on the Internet in the same web site you found this book. If not, you may also find it at **https://archive.org/details/texts**
Search by book title.

### Tamil Language

Tamil Language: River Valley Civilization to Silicon Valley Civilization

Indian Government Interference in Internet Tamil: (Tamil Language in the Age of Computers, Electronics and Internet)

Indian Government and Tamil Language (Ancient Rivalries and Current Tug of War)

Tamil in Tamil Nadu Schools, Colleges and Universities

Tamil Today: Some Thoughts and Musings

### Battle for Tamil Eelam

Tamil Nadu and the Battle for Tamil Eelam (Sri Lanka)

India and the Battle for Tamil Eelam (Sri Lanka)

United States of America and the Battle for Tamil Eelam (Sri Lanka)

International Community and the Battle for Tamil Eelam (Sri Lanka)

Thoughts and Musings on the Battle for Tamil Eelam (Sri Lanka)

**Tamil Nadu**

Early History of Dravidian Parties in Tamil Nadu: 1916-1959

A Political History of Dravidian Movement and Parties in Tamil Nadu

Economic Discrimination of South India (With Examples from Tamil Nadu)

Indian Interference in the Internal Affairs of Tamil Nadu

Tamil Nadu: Historical Perspectives, Distortions and Blackouts

A Political Biography of Tamil Nationalist Poet Pavalareru Perunjchiththiranar

Dark Clouds over Tamil Nadu (Cauvery Water, NEET, Jallikattu, Navodaya Schools and Fishermen Shootings)

The Two Golden Ages of Tamil Nadu and the Current Dark Days

Lighter Side of Life and Politics in Tamil Nadu

**India - Current Affairs**

The Failed Indian Democracy: Devolution is the Solution

Hindi Imposition Papers (15 volumes)

Economic Discrimination of South India (With Examples from Tamil Nadu)

Hindi, India and the United Nations: Opposing View from Non-Hindi Indians

**நூல் முடிவுற்றது**

முதல் பக்கத்துக்குப் போக இங்கே கிளிக்கடிக்க